DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.118/2014

PROSECUTION WITNESS No - PW- 4

| | | | |
|---|---|---|---|
| Name : | செந்தாமரை | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2026.

4 வது, 6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை :**

எனக்கு சொந்த ஊர் கொல்லங்குடி ஆகும். எனது குடும்பத்தோடு அங்கு வசித்து வருகிறேன். நான் சரவண சைக்கிள் கம்பெனி கடை நடத்தி வருகிறேன். நான் வழக்கு சம்பவ காலத்தில் 30 சைக்கிள்கள் வைத்திருந்தேன். என்னிடம் தஞ்சாவூர் நபர் என்று சொல்லி ஒருவர் சைக்கிள் வாடகைக்கு கேட்டார். வந்தவருடன் சுமார் 4, 5 பேர்கள் வந்தனர். 20, 25 வருடங்கள் ஆனதால் எனக்கு வந்து பெயர் சொல்லி சைக்கிள் எடுத்தவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. இன்றிலிருந்து தேதி எனக்கு சரியாக ஞபாகமில்லை. சுமார் 20 வருடங்களுக்கு முன்னால் என்று நினைக்கிறேன். அவர்கள் மொத்தம் சுமார் 6 சைக்கிள் எடுத்தார்கள். அதை எனது நோட்டு புத்தகத்தில் எழுதிக்கொண்டேன். இந்த நிகழ்வுக்குபின் முதல் நாள் காலை 11.00 மணிக்கு சைக்கிள் எடுத்துச் சென்ற நிலையில் அன்று இரவே சுமார் 9.30, 10.00 மணியளவில் போலிசார் வந்து என்னிடம் விசாரிக்கும்போது இதுவரை சைக்கிள் வரவில்லை என்று சொன்னேன். சைக்கிள் கொடுத்த நோட்டை அவர்கள் வாங்கிச் சென்றார்கள். வாடகைக்கு சைக்கிள்கள் எடுக்கப்பட்டது குறித்து நான் எழுதிய நோட்டுபுத்தகம் என்னிடம் காட்டப்படுவது தான். மேற்படி நோட்டு புத்தகம் **அ.சா.ஆ.2** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நோட்டில் பன்னீர் மகன் காளீஸ்வரன் உட்பட எழுதப்பட்டுள்ள பெயர்கள் உள்ள பக்கம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த சைக்கிள்கள் என்னுடையது தான். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

ஆஜர் எதிரிகளை நான் எப்போதும் பார்த்ததில்லை என்றால் சரிதான். சைக்கிள் எடுத்ததாகச் சொல்லப்பட்ட தேதியிலும் நான் ஆஜர் எதிரிகளை பார்த்ததில்லை என்றால் சரிதான். எனக்கு குமார், பன்னீர்செல்வம், காளீஸ்வரன் ஆகிய நபர்களை தெரியாது நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு என்னை வரவழைத்து நோட்டைப் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதற்கு அத்தாட்சி எதுவும் எழுதி என்னிடம் போலிசார் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரிதான். சைக்கிள் கடைக்கு வந்த நபர்கள் தஞ்சாவூர் என்று சொன்னார்கள் ஆனால் அவர்கள் எந்த ஊர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 நோட்டுபுத்தகத்தை காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 16:02:44 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.118/2014

PROSECUTION WITNESS No - PW- 5

| | | | |
|---|---|---|---|
| Name : | மெய்ஞானமூர்த்தி | Caste: | |
| Father Name/Husband name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2026.

4 வது, 6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை :**

எனக்கு சொந்த ஊர் கொல்லங்குடியில் உள்ள காமராஜர் காலணி ஆகும். நான் ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வந்தேன். எனக்கு முன்னாள் சாட்சி சொன்ன செந்தாமரை என்பவரை எனக்கு தெரியும். அவர் கொல்லங்குடியில் சரவணா என்ற சைக்கிள் கடை வைத்திருந்தார். கடந்த 30.06.2000 ம் தேதியில் இரவு 09.00 மணியளவில் காளையார்கோவில் காவல் ஆய்வாளர் வந்து சரவணா சைக்கிள்கடையில் செந்தாமரை விசாரித்த போது சைக்கிள் வாடகை நோட்டை வாங்கி பார்வையிட்டனர். அவரிடம் கைப்பற்றிய வண்டியை வாடகைக்கு விடும் நோட்டுகள் குறித்து விசாரணை செய்து அவர்களிடம் இருந்து சைக்கிள் எடுத்தவர் குறித்த விவரம் அடங்கிய நோட்டை போலிசார்கள் கைப்பற்றினார். மேற்படி அத்தாட்சியில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நோட்டை எதற்காக கைப்பற்றினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இந்த வழக்குடன் தொடர்புடைய மூல வழக்கு எண். 5/2005 ல் ஏற்கனவே நான் 8 வது சாட்சியாக சாட்சியமளித்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஏற்கனவே நான் மூல வழக்கு எண். 5/2005 8 வது சாட்சியமாக விசாரிக்கப்பட்ட போது என் முதல் விசாரணையில் எதற்காக கையொப்பம் போட்டேன் என்று ஞாபகமில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கில் என் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்றி விசாரிக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி என் விசாரணையில் எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையில் நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் எழுதப்பட்டிருந்ததா அல்லது எழுதாமல் இருந்ததா என்று தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் சாட்சி அ.சா.4 செந்தமாரை கடைக்கில் நான் சொன்னது போல் காளையார்கோவில் காவல் நிலைய ஆய்வாளர் நான் சொன்ன தேதியில் கொல்லங்குடி சைக்கிள் கடைக்கு வரவில்லை என்றும் அங்கு வைத்து அ.சா.4 செந்தாமரையிடம் எந்தவித நோட்டும் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்லிகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 16:02:53 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை